8th November 1966]

மானவரை பலருக்கு நிலங்களைக் கொடுப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்களா ? அல்லது, அப்படிச் செய்ய வழிவகை செய்ய முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சில இடங்களில் 5 ஏக்கர் 10 ஏக்கர் ஏக்கர் கொடுக்க முடியும். சில இடங்களில் ஒன்றிரண்டு ஏக்கர் கொடுப்பது சாத்தியமாக இருக்கலாம். அதை அரசாங்கம் கவனித்துத்தான் செய்கிறது.

திரு. எம். எஸ். மணி : மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள பதிலில் திருச்சி மாவட்டத்தில் 3592.02 ஏக்கர் நிலம் இருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலங்களினுடைய சர்வே நம்பர்களையும் வெளியிட்டால்தான் நிலம் இல்லாதவர்கள் விண்ணப்பம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால் அவைகளை வெளியிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கு இருக்கக்கூடிய டிமாண்டைபொருத்தது. அங்கே இருக்கிறவர்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துச் செய்கிறார்கள். அதற்கு மேல் அவசியம் ஏற்பட்டால் பார்த்து செய்யலாம்.

***513 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், வானூர், கிளியனூர், மரக்காணம் பிர்க்காக்களில் உள்ள பஞ்சம தரிசுகள் எவ்வளவு ?

(இ) அவைகளில் பஞ்சமர்கள் (ஆதி திராவிடர்கள்) வசம் உள்ள பஞ்சம தரிசு எவ்வளவு ?

(உ) மீதமுள்ள பஞ்சம தரிசு யாருடைய வசத்தில் இருக்கின்றன ?

(எ) பஞ்சமர்களுக்கு ஒதுக்கப்பட்ட பஞ்சம தரிசு பூராவும் பஞ்சமர்களுக்கு இதுவரைக்கும் பட்டா செய்து கொடுக்காததற்கு காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 514-66 ஏக்கரா புன்செய், 9-56 ஏக்கரா நன்செய்.

(இ) 41-24 ஏக்கரா புன்செய், 4-54 ஏக்கரா நன்செய்.

(உ) 20-53 ஏக்கரா புன்செய் நிலமும் 2-36 ஏக்கரா நன்செய் நிலமும் ஜாதி இந்துக்களின் வசத்தில் உள்ளன. எஞ்சியுள்ள பகுதி தரிசாகக் கிடக்கின்றது.

(எ) பஞ்சமர்கள் இந்த நிலங்களை தங்களுக்கு ஒப்படை செய்து தருமாறு மனுசெய்து கொள்ளும்போது அவர்களுக்கு நில ஒப்படை செய்யப்பட்டு வருகிறது.

[8th November 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நிலங்கள் ஜாதி இந்துக்களிடம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். ஆங்கிலேயன் காலத்திலிருந்தே அந்த நிலங்கள் பஞ்சமர் களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கும்போது எப்படி அந்த நிலங்கள் பஞ்சமர் அல்லாதவர்களுக்குக் கொடுக்கப் பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்களும் நிலம் இல்லாத ஏழை களாக இருப்பார்கள். எந்தப் பகுதியில் பார்த்தாலும் நிலம் ஏராளமாக இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய ஹரிஜனங்களும், பஞ்சமர்களும் கேட்டால் அரசாங்கம் கொடுக்கத் தடை இல்லை.

பத்திரங்கள்

*514 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஸ்டாம்பு வெண்டர்கள் ஒரே நேரத்தில் ரூ. 400 வரை தான் ஒருவருக்கு பத்திரம் விற்பனை செய்யலாம் என்பது உண்மையா ?

(இ) அந்த அளவைக் கூட்டவேண்டும் என்று ஸ்டாம்பு வெண்டர்களிடமிருந்து 1965-66-ம் வருடங்களில் கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

(உ) அந்த அளவை உயர்த்திக் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Under the existing instructions, a stamp vendor cannot sell to an individual stamps exceeding Rs. 400 in value in respect of a single instrument at a time.

(*b*) No representations have been received by the Government.

(*c*) The question of raising the limit is under the consideration of the Government.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நானூறு ரூபாய் என்ற வரம்பு எப்போது நிர்ணயிக்கப்பட்டது ? அப்போதைக்கப்போது பத்தி ரத்தின் தொகை அதிகப்பட்டு வந்திருக்கிறது அல்லவா ? அதற்குத் தகுந்தாற்போல் இந்தத் தொகையை ஏற்றிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தத் தொகை அளவு 1947 அல்லது அதற்குப் பிறகு உயர்த்தப்பட்டது. மேலும் உயர்த்து வது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : ஒரு ரூபாய் மனு லேபிள், 25 பைசா மனு லேபிள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்போது பல மனுக் களுக்கும் இந்தத் தொகை லேபிள்களை ஒட்ட வேண்டியிருக்கிறது. இந்த லேபிள் கிடைக்காமல் மக்கள் 2 ரூபாய், 3 ரூபாய் மனு